# ஆஸி. மனித உரிமைகள் குழு யாழ். வர முயற்சி

(கன்பரா)

முன்னர் கொழும்புக்கு இரு முறை வந்தபோது யாழ்ப்பாணம் வருவதற்கு முயற்சித்து தடைப்பட்டு திரும்பிச் சென்ற அவுஸ்திரேலிய மனித உரிமைகள் குழு' மீண்டும் யாழ் வர முயற்சித்து வருகிறது.

முந்திய இலங்கை விஜயத்தின்போது கொழும்பிலிருந்து கொண்டு யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களையும் தமிழர் மீது ஏற்படுத்தப்படும் மனித உரிமை மீறல்கள் கொடுமைகள்எல்லாம அறிந்து சென்ற இக்குழுவின் தலைவர் இனப்பிரசனைக்கு தீர்வு ஏதும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 2 இதழ் 34
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 15 — 03 — 1992

## புலிகள் - கிறிஸ்தவ குழு இன்று பேச்சு நடத்துவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள கிறிஸ்தவ தூதுக்குழு விடுதலைப் புலிகளை இன்று சந்தித்து பேச்சுக்கள் நடாத்தவுள்ளனர்.

இதேவேளை நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியிலுள்ள கிறிஸ்தவத் தேவாலய வளாகத்தில் இன்று காலை 8-30 மணிக்கு மேற்படி குழுவினர் கிறிஸ்தவ பொதுமக்களைச் சந்தித்துப் பொது மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் அறிந்து கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. (வி)

# வடக்கு-கிழக்கு இணைப்பை தெரிவுக்குழு எதிர்க்கலாம்?

## ஏனைய விடயங்களில் இணக்கம் ஏற்படும்?

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னை தீர்வு குறித்து அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை எதிர்க்கலாமென தற்போது தெரியவருகிறது. இதுகுறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் தெரிவுக்குழு உறுப்பினருமான ஜனாப் அஷ்ரப் தெரிவித்த கருத்தும் இதனை ஓரளவு உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இதுகுறித்து ஜனாப் அஷ்ரப் தெரிவிக்கையில்;

வடக்கு-கிழக்கில் இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது சிபார்சுகளை எதிர் வரும் ஏப்ரலில் முன்வைக்கவுள்ளது. இதில் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தவிர ஏனைய அம்சங்களில் இணக்கம் ஏற்படலாம்.

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பான முழுப் பொறுப்பும் மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் தற்பொழுது உள்ளது. இக்குழு இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சு)

## அரசுக்கு எதிராக 15,000 பேர் பாதயாத்திரை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கதிர்காமம்வரையான எதிர்க்கட்சிகளின் பாதயாத்திரையின் போது 15 ஆயிரம் பேர்கலந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## தனி வல்லரசாவதற்கு அமெரிக்கா திட்டம்

(வாஷிங்டன்)

உலகில் அமெரிக்கா தான் தனி வல்லரசாக இனிமேல் திகழவேண்டும் என்றும் அதற்கேற்ப தனது வரவு செல

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய நீ பன்று இல. உதவியை நாடுகி து

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக இந்திய விசேட நீதிமன்றம் சில விபரங்களைக் கோரி இலங்கைக்கு கடிதம் ஒன்றை இந்திய தூதரகம் மூலம் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் இந்திய நீதிமன்றத்தின் சார்பில் சில சாட்சியங்களைப் பதிவு செய்யுமாறு இலங்கை நீதிமன்றம் ஒன்றை இந்திய விசேட நீதிமன்று கோரியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இக்கோரிக்கைக்கான கடி

(4-ம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தல் காலத்தில் 600 பேர் கொல்லப்பட்டனர்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் காலத்தில் 600 அரசியல் கொலைகள் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் தினத்திற்கு முதல் நாள்மட்டும் 150 அரசியல் கொலைகள் நடைபெற்றுள்ளது. கடைசி நேரத்தில் 13 எதிர்க்கட்சி அபேட்சகர்கள் கொல்லப்பட்டார்கள் என்று 1989ம் ஆண்டு பெப்ரவரி 15ந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையாளரின் அறிக்கையில் தெரியவந்துள்ளது. (மா)

## 27 தமிழ் இளைஞர் வவுனியாவில் கடத்தப்பட்டனர்

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் கடந்த சில நாட்களாக பல தமிழ் இளைஞர்கள் சமூக விரோதக் கும்பல்களாலும், இராணுவத்தினராலும் கடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுவரை 27க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும், பெரும்பாலன இளைஞர்கள், தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் வைத்தே கடத்தப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## சர்வஜன வாக்கெடுப்பை நீக்குமாறு சிபார்சு

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்ற ஆட்சி கால எல்லையை நீடிக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பிலிருந்து நீக்கப்படவேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் திரு, சந்திரானந்த டி சில்வா பொதுத்தேர்தல் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் கேட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கான உதவியை இலங்கை அரசு தடுத்தது

(கன்பரா)

யாழ்.குடாநாட்டுக்குசுமார் இருநூறு இளம் நல்லின பசுக் கன்றுகளை அனுப்புவதற்காக அவுஸ்திரேலிய மனித உரிமைகள் குழு இலங்கை அரசிடம் அனுமதி கேட்டபோது அது மறுக்கப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

இவ் அமைப்பின் தலைவர் கடந்த வருடம் டிசம்பரில் இலங்கைவந்து, பிரதம மந்திரியையும் விவசாய மந்திரி

(4-ம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்பில் காயமடைந்த சிப்பாய் ஒருவர் கொழும்பில் 13-ஆம் திகதி உயிரிழந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடைசெய்வது பற்றி இந்திய அரசு தீவிரபரிசிலனை

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யவேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கையை இந்திய மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாக இந்திய உள்துறை இணையமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று தமிழக முதல்வரை சந்தித்த போது திரு. ஜேக்கப் அவரிடம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேலும் பல சக்தி வாய்ந்த தகவல் சாதனங்கள் மாநிலத்

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி ஆசிரியர்களின் சம்பளம் நிறுத்தப்படலாம்

(கொழும்பு)

தீவுப்பகுதியை சேர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளப் பணம் அடுத்த மாதம் முதல் அவ்வப்பகுதி பாடசாலைகளிலேயேவைத்து வழங்கப்படவுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்கான சம்பளம்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ரான்சிஸ்ரர்கள், I C கள், டயோட், பற்றி சார்சர்கள் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம், (எ-1983)

## பரீட்சை

(ஆண்டு 6, 5)

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 6, 21-03-92 சனி மு. ப. 7, மு. ப. 11, நேரங்களிலும் ஆண்டு 5 பரீட்சை 22-03-92 ஞாயிறு அதே நேரங்களிலும் நடைபெறும். பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (சி-6061)

## "பெண்களே உங்களுக்கு"

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டதும், பெரியார்களின் சீரிய கருத்துக்களைக் கொண்டதுமான மேற்படி நூலைப் பத்து மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-1979)

## வல்லாரைக் குளிசை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த Gotukola Capsules கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5994)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# யாழ். மாவட்ட வதிவிட வேளாண்மை செய்கை போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தமிழீழஆய்வுநிறுவனத்தால் நடத்தப்பட்ட 'வதிவிட வேளாண்மைச் செய்கைப் போட்டி முடிவுகளில் பரிசில் பெறுபவர்களின் விபரம் வருமாறு:

சாவகச்சேரி கம நலச் சேவைப் பிரிவு: சின்னத்துரை துரைராசா அல்லாரை, இராசையா தயாவதி கொடிகாமம், சுப்பிரமணியம் கெற்பேலி.

ஆறுதல் பரிசுகள்: கனகசபை தெய்வேந்திரம் மீசாலை, குமாரசாமி ஜெயமுருகன் மீசாலை, காசிநாதன் சிவராசலிங்கம் வரணி, நடராசா நந்தகுமார் மீசாலை, வல்லிபுரம் வளர்மதி உசன், சின்னையா கந்தசாமி வரணி, பாக்கியராஜ் தேவநேசம் கெற்பேலி மிருசுவில், தேவநாயகி ராஜகுமாரன் வரணி, பாக்கியம் பெரியதம்பி வரணி வடக்கு, இராசம்மா கணேசமூர்த்தி வரணி வடக்கு.

பளை கம நலச் சேவைப் பிரிவு: காசிப்பிள்ளை நிரஞ்சன் பளை, கிருஷ்ணன் சின்னுச்சி பளை, நமசிவாயம் சின்னத்துரை பளை.

ஆறுதல் பரிசுகள்: முருகர் நாகமுத்து இயக்கச்சி, சிதம்பரநாதன் கனகசிங்கம் பளை, கதிரேசு கங்காதரம் பளை, வைரமுத்து செல்வநாயகம் பளை, சேனுதிராசா செல்வயோகன் பளை, சரவணமுத்து நடராசா பளை, சிவக்கொழுந்து சிவபாதம், பளை, ஆசீர்வாதம் ஞானம்பிகை பளை, சேனுதிராசா ராசகுமாரி பளை, சின்னர் தணிகாசலம் இயக்கச்சி.

உரும்பிராய் கம நலச் சேவைப் பிரிவு: சோமசுந்தரம் எழிலன் உரும்பிராய் கிழக்கு, மாணிக்கம் இரத்தினமலர் நீர்வேலி தெற்கு, செல்லையா உதயகுமார் உரும்பிராய் கிழக்கு.

ஆறுதல் பரிசுகள்: பண்டாரி வேலுப்பிள்ளை நீர்வேலி தெற்கு, பாலகிருஷ்ணன் வசந்தன் உரும்பிராய் மேற்கு, கந்தையாபிள்ளை சிவானந்தி நீர்வேலி தெற்கு, சின்னத்தம்பி வைத்திலிங்கம் நீர்வேலி தெற்கு, செல்லையா பத்மநாதன் கோப்பாய் தெற்கு, தாட்சாயினி மகேந்திரன் உரும்பிராய் கிழக்கு, கந்தன் முத்தன் கோப்பாய் தெற்கு, சின்னத்தம்பி சேனுதிராசா நீர்வேலி தெற்கு, கந்தையா பத்மநாதன் உரும்பிராய் வடக்கு, தம்பிமுத்து பரமானந்தம் உரும்பிராய் மேற்கு.

நல்லூர் கம நலச் சேவைப் பிரிவு: சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன் கொக்குவில் கிழக்கு, இ. நல்லையா இணுவில், சிஸ்ரர் வலேரியன் பாசையூர்.

ஆறுதல் பரிசுகள்: நாராயணசாமி விவேகானந்தன் அரியாலை, தர்மலிங்கம் ஜெகதீசன் அரியாலை, பொன்னம்பலம் லோகநாதன் கொக்குவில், சின்னையா செல்வரட்ணம் அரியாலை, மு. ஜெகதீசன் அரியாலை, வை. ரூபாகரன் கந்தர் மணியம் வீதி, க. உருத்திரகுமார் கோண்டாவில், பா. ஜெனனி அரியாலை, பொ. அருட்திரு கொழும்புத்துறை, கனகசபை பற்குணநாதன் யாழ்ப்பாணம்.

கீரிமலை கம நலச் சேவைப் பிரிவு: ரஞ்சனு கனகரட்ணம் அளவெட்டி மேற்கு, குகனேசராசா தவமணிதேவி இளவாலை, சீ.கந்தையா இளவாலை வடக்கு.

ஆறுதல் பரிசுகள்: ஆனந்தஜோதி சபாரத்தினம் அளவெட்டி, அம்பலம் தம்பிராசா அளவெட்டி மேற்கு, கந்தையா சுப்பிரமணியம் தெல்லிப்பளை, விஜயரட்ணம் தாரணி அளவெட்டி, லோ. மரியநாயகம் அளவெட்டி கிழக்கு, தம்பையா பழனிவேலு அளவெட்டி, பாலசுப்பிரமணியம் சிவரூபன் தெல்லிப்பளை, வைரமுத்து சிவாஜினி அளவெட்டி மத்தி, சோமசுந்தரம் மோகனதாஸ் அளவெட்டி, கணேசமூர்த்தி பேராதரன் தெல்லிப்பளை.

[தொடரும்]

# இராசிபலன்

15 03 1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 02)

ஏகாதசி மு. ப. 9. 19 வரை பூசம் பி. ப. 3. 12 வரை, சித்தயோகம், இராகுகாலம் மாலை 4. 51 முதல் 6.21வரை: சுபநேரம் காலை 9. 21 முதல் 10. 31 வரைஏகாதசி விரதம்.

மேடம்,- எதிர்பாராத நஷ்டம். மனக்குறை, அலைச்சல்.

இடபம்:- ஜனவசியம், தொழில்லாபம், உல்லாசம்,

மிதுனம்:- முறுமுணுத்தல், அதிகயோசனை, வெறுப்பு,

கடகம்:- எதிர்பாராத அதிஸ்டம், மனமகிழ்ச்சி, குடும்பசுகம்,

சிங்கம்:- முயற்சியில் தோல்வி, காரியதடை, பணமுடை.

கன்னி:- விடாமுயற்சி, குடும்பசுகம், தொழில் சிறப்பு.

துலாம்:-மனைவியால் புகழ், கடித உறவு, பயணம்.

விருச்சிகம்:- பயந்தசுபாவம் தகாத நட்பு, சோம்பல்

தனுசு:- பணச்சிக்கல், ஏமாற்றம், நண்பர் பிரிவு.

மகரம்:- அதிகவருமானம், தொழில் மகிழ்ச்சி, தானதர்மம்.

கும்பம்:- வாக்குவன்மை, புதியதிருப்பம், இனசனவரவு,

மீனம்:- சடுதியானதுன்பம், தொழில் பாதிப்பு, கடும்போக்கு.

- ஜோஸ்யர்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## மகாபொல கொடுப்பனவு 3ம், 4ம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

### இரண்டாம் வருடம்

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் / கலைப்பிரிவு / வர்த்தகப் பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 16-03-92 | 9-00—12-00 மு. ப. |
| | 19-03-92 | 9-00—12-00 மு. ப. |
| | 23-03-92 | 9-00—12-00 மு. ப. |

### மூன்றும் வருடம்

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் / கலைப்பிரிவு / வர்த்தகப் பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 16-03-92 | 1-30—3-00 பி. ப. |
| | 19-03-92 | 1-30—3-00 பி. ப. |
| | 23-03-92 | 1-30—3-00 பி. ப. |

### நான்காம் வருடம்

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் (4ம், 5ம் வருடம்) / கலைப்பிரிவு / வர்த்தக பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 17-03-92 | 9-00—12-00 மு.ப, |
| | 20-03-92 | 9-00—12-00 மு.ப. |
| | 24-03-92 | 9-00—12-00 மு.ப. |

### 2ம், 3ம், 4ம் வருடம்

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு / உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 17-03-92 | 1-30—3-00 பி.ப. |
| | 20-03-92 | 1-30—3-00 பி.ப. |
| | 24-03 92 | 1-30—3-00 பி.ப. |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

(ஏ-1987)

# முக்கிய அறிவித்தல்

## நாய்களுக்கு தடுப்பூசி போடுதல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள நாய்களுக்கு எதிர்வரும் 16-03-92 முதல் 30-03-92 வரை விசர்நோயைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசி போடும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. தடுப்பூசி போடுவதற்காக நாய்களைக் கொண்டுவரவேண்டிய இடங்கள் பற்றி அவ்வப்பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் தரப்படும். இத்திட்டம் வெற்றிபெற பொதுமக்கள் அனைவரும் எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்,

மாநகர ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்.

யாழ்ப்பாணம்.

13-03-1992.

(ஏ-1988)

# தொழிற் பயிற்சிகள்

எந்த நாடுகளிலும் இலகுவாக தொழில் வாய்ப்புப் பெற அரிய சந்தர்ப்பம்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன றேடியோ. ரெலிவிசன், வீடியோ டெக் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்; 4 மாதம்.

★ றீவைண்டிங்:
மின்மோட்டர், ரான்ஸ்போமர், டைனமோ மற்றும் எலக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 4 மாதம்.

★ எலக்ரிக்கல் வயறிங்:
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 2 மாதம்.

★ மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம், நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் பைசிக்கிள் திருத்துதல் ஆரம்பம் முதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

★ SPOKEN ENGLISH

பயிற்சிகள் ஆரம்பம்:

18—03—92 (கிழமை)

21—03—92 (சனி, ஞாயிறு)

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை)

யாழ்ப்பாணம்.

(எ-1982)

"விராட் விஸ்வப் பிரம்மனே நம"

# நீங்காத நினைவில் 6-ம் ஆண்டு



## அமரர் செல்லப்பா இரத்தினசபாபதி பத்தர்

| மலர்வு: | உதிர்வு: | திதி. |
|---|---|---|
| 03-07-1940 | 21-03-1986 | 15-03-1992 |

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஆறு ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு எம் உயிர் உள்ளவரை நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வண்ணை. ஸ்ரீகாமாட்சி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

பாதிரி கோவிலடி,

குளப்பிட்டி,

கொக்குவில் கிழக்கு.

(சி.6062)

## குற்றம்சாட்டப்பட்ட அரச ஊழியருக்கு விசாரணைக்காலத்தில் 1/2 மாத சம்பளம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

அரச ஊழியர்கள் தமது சேவைக்காலத்தின் போது பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டு அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆறு மாதத்திற்கு மேல் நீடிக்கும் பட்சத்தில் அரைமாத சம்பளம் மேற்படி ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான சுற்றறிக்கையொன்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னர் ஒரு ஊழியருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு அவர் மீதான விசாரணை முடிவடைந்து அவர் நிரபராதியென தீர்ப்பு கிடைத்தால் மாத்திரமே சம்பளமும் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (சி-க)

## விஷ சாராயத்திற்கு 10 பேர் பலி

(சென்னை)

தஞ்சை மாவட்டம்மயிலாடுதுறையில் நேற்று முன் தினம் விஷ சாராயம் அருந்திய 10 பேர் மரணமானதாகவும் 25 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உறுதியளித்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக இது வரையில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மறுமலர்ச்சிக்கழக ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் மறுமலர்ச்சிக்கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா நாளை 16-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கைலாசபதிகலையரங்கில் நடைபெறும்.

## கடை உடைத்து திருட்டு

(புங்குடுதீவு)

கொக்குவில் பகுதியில் உள்ள கடையொன்று கடந்த 13ம் திகதி இரவு உடைக்கப்பட்டு சுமார் பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

கொக்குவில் 'சேர்ச் லேன்' தொடக்கத்தில் உள்ள கடையிலேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

கூரை சீற்றுக்களை உடைத்தே திருடர்கள் உட்புகுந்துள்ளனர். இத்திருட்டுப் பற்றி தமிழீழ காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## ஏப்ரலில் புலமைப்பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

1992-ம் ஆண்டிற்கான 5-ம் ஆண்டு புலமைப் பரிட்சை இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் யாழ். குடாநாட்டில் நடாத்தப்பட விருப்பதாக யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (க)

## பயிற்சிமுகாம்கள்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கரபந்தாட்டப் பயிற்சி முகாம்கள் இரண்டு, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் இந்த முகாம்கள் ஆரம்பித்து வைக்கப்படும்.

பண்டத்தரிப்புக் கோட்ட உடற்பயிற்சி இணைப்பாளர் திரு. வ. முருகேசு இப்பயிற்சி முகாம்களை நெறிப்படுத்துவார். [139)

## திருமலை மாவட்டத்தில் தமிழ்மக்கள்வெளியேற்றம்; சிங்களவர் குடியேற்றம்

திருமலை)

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இருல்குழி, உப்பாறு ஆலங்கேணி ஆகிய தமிழர் வாழும் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு சிங்களவர்கள் துரிதகதியில் குடியமர்த்தப் படுவதாகவும் இதன் முன்னோடி நடவடிக்கையாக இராணுவ முகாம்களும் ஆலங்கேணியில் பொலிஸ் நிலையமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப்பகுதியில் வாழ்ந்த தமிழர் அகதிமுகாமில் இருப்பதால் அவர்களின் இடங்களிலேயே சிங்களவர் குடியமர்த்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. [க)

## ஓய்வூதியர்களுக்கு மரணசகாய நிதி

[மீசாலை]

தென்மராட்சி ஓய்வூதியர் சங்க மாதாந்தக் கூட்டம் சங்க உபதலைவர் திரு. மு. காங்கேசு தலைமையில் நடைபெற்றது.

ஓய்வூதியர் ஒருவர் மரண சகாய நிதியில் 300 ரூபாவை வைப்புப் பணமாக இட வேண்டுமெனவும் அங்கத்தவர் ஒருவர் இறக்கும் பட்சத்தில் ஒருவருடத்துக்குள் 1000 ரூபா வீதம் 5 வருடத்துக்கு 5000 ரூபா வழங்கப்படும் எனவும் 5 வருடத்துக்கு மேல் மரணம் நீடிக்கும் பட்சத்தில் சபைகூடி முடிவு செய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## முல்லைத்தீவிற்கு உணவுபொருள்விநியோகம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை 22 லொறிகளில் 220 மெற்றிக்தொன் அரிசி, மா. சீனி, பால்மா மற்றும் பொருட்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சிக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 22 லொறிகளில் உணவு மற்றும் பொருட்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட விருப்பதாகவும் கூறப்படுகிறது. (க]

## இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 11-00 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப் படிப்புக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (வி)

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்க சமாஜம் யாழ். பிராந்திய சபை எல்லைக்குட்பட்ட சகல சிக்கன கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு இன்று 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். மணியம் கட்டிடத்தில் பிராந்தியசபைத்தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும. (154)

## வடக்குக் கிழக்கில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழககில் விவசாய அபிவிருத்தியை துரிதகதியில் மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இலங்கை வங்கி விவசாய புனருத்தாரண திட்ட மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்படி திட்டத்திற்கு கடன் வழங்கப்படவிருப்பதாகவும் இக் கடனை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பான கருத்தரங்குகள் இலங்கை வங்கி ஊழியர்களால் வடக்கு-கிழக்கில் நடாத்தப்பட விருக்கின்றதாகவும் கூறப்படுகிறது

இதன்முன்னோடி நடவடிக்கையாக இன்று ஞாயிற்றுக் கிழமை வவுனியா மாவட்டத்தில் முதலாவது விவசாயக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டு மூலம் மாணவர் ஆற்றலை வளர்க்க வேண்டும்

(உடுவில்)

இவ்வருடம் அதிகமான பாடசாலைகள் உடற்பயிற்சிகளில் பங்குகொண்டு சிறப்பாக செய்துள்ளன. வகுப்பறைமட்டத்தில் அறிவை மட்டும் மாணவர்களுக்கு வழங்காமல் மாணவர்களின் உளப்பாங்கு, திறன், ஆற்றல்களை வளர்க்கும் இதுபோன்ற பயிற்சிகளையும் விளையாட்டுக்கள் மூலம் வழங்கவேண்டும்.

மருதனார்மடம் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கோட்டமட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மருதனைமடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் இவ்வாறு கூறினார்,

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிகளில் 44 பாடசாலைகள் பங்குபற்றின.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளில் உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. நாகமணி உரையாற்றுகையில், உடற்பயிற்சி போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுடன் மட்டும் நில்லாது பாடசாலையில் உள்ள ஏனைய மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க ஆசிரியர்கள் முயல வேண்டும் என்றார். (109)

## பன்ன வேலைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்களுக்கு, பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் பன்ன வேலைப் பயிற்சி அளிக்கப் பட்டுவருகிறது.

## வாளி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு அருகிலுள்ள கிணற்றிலிருந்து வாளி திருடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் பொருட்டு, இக்கிணறு யாழ். கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு, மறுசீரமைத்து வாளி ஒன்று போடப்பட்டிருந்தது. இந்த வாளியே விஷமிகள் சிலரால் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (வி)

## மெய்வல்லுனர் போட்டி

(வடமராட்சி)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர் போட்டி நாளை 16ம் திகதி திங்கட்கிழமை (16-3-92) பிற்பகல் 2-00 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் சு. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறும் .இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மருகனூர்மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, இ. சிவானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் வி. பு. ம, முன்னணி திரு. இளம்பரிதி, கொத்தணி அதிபர் திரு. வே. சந்திரசேகரம் பிள்ளைஆகியோர் கலந்துகொள்கின்றார்கள். (51)

## ★ பருத்தித்துறையில் ஒரே இரவில் 2கடைகளில் திருட்டு

(பருத்தித்துறை)

ஒரேஇரவில் பருத்தித்துறையில் உள்ள இருகடைகளின் கூரைகள் பிரிக்கப்பட்டு கொள்ளைகள் இடம் பெற்றுள்ளதாக வடமராட்சி காவல்துறை அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இருகடைகளுமே இரவு வேளையில் கூரை பிரிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

இவ்விருகடைகளிலும் தலா 10,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இக்கொள்ளைகள் பற்றி காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

மேற்படி சைக்கிள் கடையில் கடந்த வருடமும் இரவு வேளை உடைக்கப்பட்டு சுமார் 30,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## 1000 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

வேலையற்ற ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளில் 65, ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும்நாட்டின் மொத்த ஆசிரியர் தேவையில் இது மூன்றில் ஒரு பகுதி எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (க)

## தவக்கால நற்சிந்தனை

''கிறிஸ்து நம்மை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்''

(பிலி. 3: 21]

மண்ணுலக மகிமையினுல் எமது வாழ்நாளை வீணாக்காது விண்ணுலக மகிமையினுள் பிரவேசிக்க அவரின் குரலொலிக்குச் செவிசாய்ப்போம்.

மோ. தார்சிசியஸ்

# துருக்கியில் நில நடுக்கம்; 570 பேர் பலி

## 400 பேரை மீட்க முடியவில்லை; 200 கட்டிடங்கள் தரைமட்டம்

(அங்கரா)

கிழக்கு துருக்கியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட படு மோசமான நிலநடுக்கத்தால் 570க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

15 லட்சம் மக்கள் வாழும் பகுதி படுமோசமாகப் பாதிக்கப்பட்டு, பல கட்டிடங்கள் நாசமாகியுள்ளன. ஒரு பகுதியில் மாத்திரம் சுமார் 200 கட்டிடங்கள் தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கி மரணமாகியோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மோசமான இடிபாடுகளிடையே சிக்கியுள்ள மேலும் 400பேரை மீட்க மீட்புப்பணியினர் கடுமையாக பிரயாசைபடுகிருர்கள். இவர்களை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம். படுகாயமுற்ருேரை உடனுக்குடன் வைத்தியசாலைகட்கு அனுப்ப ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பாடசாலை ஒன்று இடிந்து விழுந்ததில் அதில் இருந்த 62 மாணவர்கள் இடிபாடுகளுக்குள் புதைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தினுல் 3 மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல மாகாணங்களுக்குமான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

தற்போது வெப்பம் அப்பிரதேசத்தில் 15 பாகை செல்சியசால் குறைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாகாணங்களில் அடுத்துள்ள மாகாணங்களிலும் மீண்டும் நில நடுக்கம் ஏற்படலாம் என மக்கள் அஞ்சி வீடுகளை விட்டு வெளியேறி வெளியான இடங்களில் தங்கியுள்ளனர்.

இது போன்ற சம்பவம் கடந்த 75 வருடத்துள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க . (கே)

## விஷமிகள் சேட்டை 27 உயிர்கள் பலி

(கொழும்புத்துறை)

கொழும்பத்துறை கிழக்கில் இரண்டாம் குறுக்குத் தெருவில் வீடு ஒன்றில் வீட்டுக்காரர்கள் அயல் வீட்டுக்கு ரீ. வி, படம் பார்க்கச் சென்றிருந்தபோது விஷமிகளின் சேட்டையால் 13 கோழிகளும், 14 புறுக்களும் துடிதுடித்து மடிந்த பரிதாபச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வீட்டுக்காரர்கள் அன்றைய இரவில் வீட்டிலில்லாதபோது வீட்டுக் கூரையிலும். முற்றத்திலும் பின்புறக் காணிகளிலும் விஷமிகளால் நஞ்சு கலந்த அரிசி, பயறு, நெல் ஆகியன போடப்பட்டிருந்ததால் அவ்வீட்டில் வளர்க்கப்பட்டுவந்த கோழிகளும், புறுக்களும் பக்கத்து வீட்டுக் கோழிகளும் அவற்றைத் தின்று பரிதாபமாக இறந்துள்ளன,

இம் மனிதாபிமானமற்ற கொடூரச் சம்பவம் குறித்துக் காவல்துறையினருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. (154)

## முப்பது கடைகளை திருத்த உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் 90-ம் ஆண்டு யூன் மாதத்திற்குப் பின்னர் ஏற்பட்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலினுல் தரைமட்டமான 30க்கும் மேற்பட்ட கடைகளை யாழ். மாநகரசபை மீள அமைத்துக்கொடுக்கவுள்ளது.

சுமார் 30க்கும் மேற்பட்ட கடைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. (56)

## இலங்கையில் விரைவில் புதிய கல்விக் கொள்கை

(கொழும்பு)

தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் புதிய கல்விக் கொள்கைகள் வகுக்கப்படவிருக்கின்றன என்று ஜனதிபதி ஆர். பிரேமதாசா நீர் கொழும்பு நியூஸ்கெற் கல்லூரியின் 175 வது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: நாட்டின் நீண்டகால தேவைகளுக்கு பொருத்தமான கல்வி முறையொன்று உருவாக்கப்படவிருக்கிறது. கல்விமுறைகளில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் இதன் மூலம் நிறுத்தப்படவிருக்கின்றன என்ருர். (மா)

## அரசின் புதிய முயற்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பாதயாத்திரை தொடர்பான சுவரொட்டிகளை அகற்றும் வேலைகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன.

அரசு பாதயாத்திரையை முறியடிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை எடுக்குமென்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கிருர்கள். (மா)

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தாரும் சொலிக்கனமும் கலந்து ஒயில் தயாரிக்க முற்பட்டபோது தார்ப் பீப்பா வெடித்து தீக்காயங்களுக்குள்ளாகிய இருவரில் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமாஞர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த கே. தேவராசா (18 வயது) என்பவரே மரணமாஞர்.(56)

### தீவுப்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதத்துடன் ஏனைய குதிகளில் வழங்கப்படுவது நிறுத்தப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தீவுப்பகுதியிலிருந்து வெளியேறி தென்பகுதி பாடசாலைகளில் கடமையாற்றிவந்த ஆசிரியர்களின் சம்பளப்பணம கடந்த மாதத்துடன் நிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### வடபகுதிக்கான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யையும் சந்தித்து மல்லாகம் கிராம அபிவிருத்திசங்க தலைவர்களையும் யாழ், பல்கலைந்கழக துணைவேந்தரையும் சந்திக்கவும் உதவி புரியவும் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ள கேட்டபோது அது மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நல்லின பசுக்கன்றுகளை வடக்கே அனுப்பாது தென்பகுதிக்கு அனுப்புமாறு பிரதம மந்திரியும், விவசாய மந்திரியும் தம்மை கேட்டுக்கொண்டனராம்.

தாங்கள் யாழ் மக்களுக்கு உதவிபுரிய முன்வந்தும் அரசின் தடையால் ஏதும் செய்ய முடியாமலிருப்பதாயும் குறிப்பிட்டு இந்நிறுவனத் தலைவர் மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்க தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரனுக்கு தமது தெரிவித்துள்ளார். (கே)

### புலிகளை தடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் பல்வேறு பகுதிகளிலும் மறைத்து வைக்கப்பட்டிருக்கக் கூடுமென கிடைத்த தகவல்களையடுத்து புலிகளின் நடவடிக்கைகளை மத்தியரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## உலக கிண்ண கிரிக்கெட் ஆஸ்திரேலியா வெற்றி

(மெல்போன்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சிம்பாவேயை 128 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 46 ஓவர்களில் 265 ஓட்டங்களைப் பெற்றது. (மக்வோ-76) சிம்பாவே அணி 40.1 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

### இன்று 3 ஆட்டங்கள்

இன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறும் இரு போட்டிகளில் இலங்கையை எதிர்த்து பாகிஸ்தானும், இந்தியாவை எதிர்த்து தென்னாபிரிக்காவும் மோதும். நியூசிலாந்தில் இங்கிலாந்தை எதிர்த்து நியூசிலாந்து மோதும். (சி)

### ஆஸி மனித உரிமைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காண தங்களால் ஏதும் முயற்சிக்கவும் ஆர்வம் கொண்டுள்ளார்.

இவரது அடுத்த விஜயத்தின் போது வேறு உறுப்பினர்களையும் அழைத்து வரவும் உத்தேசத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (கே)

## வாகனம்மோதி வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்முட்டிக்கருகில் நின்ற ஒருவர் மீது வேகமாக வந்த வாகனம் ஒன்று மோதியதில் வயோதிபர் ஸ்தலத்திலே பலியாஞர்.

நேற்றுக்காலை 11-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்லத்துரை (65-வயது) என்பவரே இவ்வாறு வாகனம் மோதி இறந்தவராவார். (56)

### இந்திய

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தம் 'லெட்டர் றெக்கெட்டறி' என சட்டபரிபாஷையில் அழைக்கப்படுகிறது எனவும் இந்திய நீதிமன்றின் மேற்படி கோரிக்கை குறித்து இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்துவருவதாகவும் தெரியவருகிறது. (க)

## அமெரிக்காவிற்கு இந்தியா அடிபணியமாட்டாதாம்

(புதுடில்லி)

அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது என்று இந்திய வெளியுறவு செயலர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்தார்.

அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பிய ஜே என். டிக்ஸிற் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

அனுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தங்கள் எதிலும் இந்தியா கையெழுத்து இடாது என்ருர். (மா)

### தனி வல்லரசாவதற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுத் திட்டங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும் என்றும் அமெரிக்க இராணுவத்துறைப் பணியகமான- 'பென்ரகன்' அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்பு தற்போது அமெரிக்கா தான் சர்வ வல்லமை படைத்த வல்லரசாக திகழ்வதால் அமெரிக்காவை மிஞ்சி வேருெரு வல்லரசு மேலெழவிடாமல் தடுக்க அமெரிக்கா தற்போதிருந்தே தயாராக வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கே)

### உதைபந்தாட்டம்: பாடும்மீன் வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நேற்று ஆரம்பமான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் பாடும்மீன் கழகம் ஊரெழு ரேயலை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதும். இம்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

## கைதான பலர் காணமல்போயுள்ளனர்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நான்கு தினங்களில் 10 தமிழ் மக்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தளவாய், மண்டூர், சித்தாண்டி ஆகிய பகுதிகளை இராணுவத்தினர் சுற்றிவளைத்து, பொதுமக்களைப் பெரிதும் துன்புறுத்திய பின்பு இரு பெண்கள் உட்பட எட்டு இளைஞர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் பற்றி இதுவரை எதுவித தகவல்களும் வெளிவரவில்லையென்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பகுதிகளிலும் பல தமிழர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### சர்வஜன வாக்கெடுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நடாளுமன்ற ஆட்சி கால எல்லையை நீடிப்பது பிரசைகளின் அரசியல் உரிமைகளை மீறும் செயல் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (மா)

### அரசுக்கு எதிராக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வார்கள் என்று எதிர்க்கட்சி பதில் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதே இந்த பாதயாத்திரையின் முக்கிய குறிக்கோளாகும்.

பாதயாத்திரையின் போது இரு நாட்களுக்கு ஒரு முறை பாதயாத்திரை செல்லும் பாதையில் பொதுக்கூட்டமும் இடம்பெறவிருக்கிறது. (மா)

## இன்னும் வெளிவரவில்லை

(கொழும்பு)

1988-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜனதிபதி தேர்தல் சம்பந்தமான அறிக்கை இன்னும் வெளிவரவில்லை.

ஜனதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுவின் காரணமாக இந்த அறிக்கை வெளிவரவில்லையென்று அரசியல் விமர்சகள் தெரிவிக்கிறர்கள். (மா)

### சிப்பாய் பலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் காயமடைந்த பலர் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (59)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.